படுத்த முன்வருவார்கள். ஆகவே இப்போதுள்ள ரூலைத் தளர்த்தி டீஸல் என்ஜின் உள்ள காரை அலாட் செய்ய வழிவகை செய்வார்களா?

திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், ஆ. கு. சுப்பையா, பெ. சௌந்தரபாண்டியன், எம். சுரேந்திரன், கே. டி. கே. தங்கமணி, எம். ஏ. லத்திப், கே. எஸ். கேதண்டராமையா, பி. வெங்கடசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"நிதிக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,27,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை இப்பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.